DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC.361/2019

Prosecution witness – PW 7

| | | |
|---|---|---|
| Name | :திரு.கார்த்திக்பாலாஜி | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(A1, A3 to A7 present. A2 absent. Petition U/s.317 Cr.P.C. filed and allowed.)
16.04.2026 at 11.30 A.M.

முதல் விசாரணை

1. நான் தற்போது இராமநாதபுரம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 05.08.2018ம் தேதி நான் கீழக்கரை அரசு மருத்துதவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்த போது காலை 10.00 மணியளவில் பி.கிரந்தை கிராமத்தை சேர்ந்த சுமார் 60 வயது மதிக்கத்தக்க தனிக்கொடி என்பவரும் அவரது மனைவி 55 வயதுள்ள முனியம்மாள் என்பவரும் அன்றைய தினம் காலை சுமார் 07.00 மணியளவில் அவர்களின் வீட்டின் அருகில் அடையாளம் தெரிந்த 7 நபர்கள் கம்பு மற்றும் அருவாளால் தாக்கியதாக மருத்துவமனையில் சிகிச்சைக்காக வந்தார்கள்.

3. அப்போது அவர்களை பரிசோதனை செய்த போது தனிக்கொடி என்பவருக்கு வலது பக்க கணுக்காலில் வீக்க காயம் இருந்தது. வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை. அவருக்கு காலில் ஏற்பட்ட காயத்திற்கு X ray எடுத்து பார்த்ததில் எலும்பு முறிவு ஏற்பட்டதாக தெரிய வந்தது. கடந்த 20.08.2018ம் தேதி அவருக்கு மேல் சிகிச்சை செய்து அறுவகை சிகிச்சை இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் செய்யப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். **தனிக்கொடிக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடுயுடன் இணைந்த சான்று அ.சா.ஆ.3 ஆகும்.**

4. அவரது மனைவி முனியம்மாளுக்கு வலது பக்க நெற்றி பகுதியில் 3x3 cm அளவுள்ள வெட்டுகாயம் இருந்தது. இடது கண்ணுக்கு அருகில் வீக்க காயம் இருந்தது. முனியம்மாளும் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் மேல் சிகிச்சை எடுத்துக்கொண்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **முனியம்மாளுக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடுயுடன் இணைந்த**

**காயச்சான்று அ.சா.ஆ.4 ஆகும்** இது சம்பந்தமாக சிக்கல் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தனிக்கொடி மற்றும் முனியம்மாள் சிகிச்சைக்கு வரும் போது நல்ல சுயநினைவுடன்தான் இருந்தார்கள் என்றால் சரிதான். தனிக்கொடியை சிகிச்சைக்கு வந்த அன்றே வெளிநோயாளியாக சிகிச்சை அளித்தோம் என்றால் சரிதான். தனிக்கொடிக்கு சிகிச்சை அளித்த மருத்துவரின் குறிப்புகளை பார்த்துதான் நான் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன் என்றால் சரிதான். என்னை விசாரணை செய்த சார்பு ஆய்வாளரிடம் நான் சிகிச்சை அளித்தது சம்பந்தமாக ஆவணங்களை எதாவது தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் சிகிச்சை அளிக்கும் போது தனிக்கொடிக்கு வலது காலில் வீக்கம் இருந்தது என்றால் சரிதான். வீக்க காயத்தை பார்க்கும் போது அந்த காயம் எத்தனை நாட்களுக்கு முன்னர் ஏற்பட்டிருக்கலாம் என்று கூறமுடியுமா என்றால் கூறமுடியாது. தனிக்கொடிக்கு எடுத்த Xray சம்பந்தமான ஆவணங்கள் என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். முனியம்மாளுக்கு ஏற்பட்ட காயம் தடுமாறு கீழே விழுந்தால் கூட ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். தனிக்கொடிக்கு ஏற்பட்ட காயத்தின் காலம் குறித்து என்னால் கூற இயலும் என்றும் நான் அரசு தரப்பிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.04.16 17:37:57 +0000